முருகப்பெருமான் துணை

**மகான் அநுமான் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.05.2023, திங்கட்கிழமை

1. ஞான குருவே அரங்கா வாழ்க
நம்பிக்கையான வாழ்வளிக்க
ஞானமருளும் தேசிகா வாழ்க
ஞாலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே அறிவுரை ஆசி
குறைவிலா சோபகிருது தகர் திங்கள்
நிறைவான மூவாறுதிகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 18 ம் நாள், 01.05.2023, திங்கட்கிழமை)
நிலமதனில் அநுமான் யானும்
3. யானும் அரங்கன் உபதேசமாக
உலகோர்க்கு அறிவுரை அருள்வேன்
ஞானமாக அரங்கன் திருகின்ற
நல் உபதேசங்கள் தனை ஏற்று
4. ஏற்றுமே பின்பற்றிட நலம்
இணையிலா தவ நெறிமுறைகளை
ஆற்றலாக எண்ணி வணங்கி
அகிலத்தார் கடைபிடித்துவர
5. வருகவே வினைவழி இருக்கும்
வஞ்சகம் சூழ்ச்சி குணமெல்லாம்
முருகா முருகா என செபிக்கவே
முழுமைபட மாற்றம் கண்டு
6. கண்டுமே தயவு தரும குணமாக
கனிவுடன் தானாக முன்வந்து
தொண்டு செய்யும் பக்குவமும்
தெரியவரும் மனபலம் திடம்
7. திடசிந்தை தெளிவு கூடியே
தினமும் ஞானிகளை பூஜிக்கும்
இடரில்லா தடையில்லா வாய்ப்பு
இயல்பாய் அமைந்து சிறக்கும்

8. சிறக்கவே செயல்கள் அனைத்தும்
சேவை நோக்கமாகி நன்கு
மறுக்கா ஞானிகள் வழியில்
மனமுவந்து செல்ல நேரும்
9. நேருமை கொண்ட மக்களாய்
ஞானிகள் தேர்வு செய்யும்
பெருமை மிக்கவர்களாகவும்
பேருலகில் ஆசான் அரங்கன் ஆசியால்
10. ஆசியால் உலகோர் சிறந்து
அழிவிலா உலகை படைக்க
நேசக்கரம் கொண்டிணைந்து
நிலமதனில் தருமம் காத்துவர
11. வருகவே உலகமெலாம் நடக்கும்
வல்லமையான சேவையால்
முருகப்பெருமான் வெளிப்பட
மொழிகுவேன் ஞான ஆட்சி மலரும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—